எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ரிப்போர்ட்டில் எந்த அறிகுறிகள் இல்லை

வலிப்பு வந்தது போல் ஞானசேகரன் நடித்தது மருத்துவ பரிசோதனையில் அம்பலம்

- மீண்டும் விசாரணையை தொடங்கிய சிறப்பு புலனாய்வு குழு
- நெருங்கிய தொடர்பில் இருந்த 6 காவலர்களின் செல்போன்கள் ஆய்வு

சென்னை, ஜன.24: எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ரிப்போர்ட்டில் உடல் நிலை பாதித்தது போல் எந்த அறிகுறிகளும் இல்லை, எனவே பாலியல் சைக்கோ ஞானசேகரன் சிறப்பு புலனாய்வு குழுவினரின் விசாரணையை திசை திருப்பும் நோக்கில் தனக்கு வலிப்பு வந்தது போல் நடித்தது அம்பலமாகியுள்ளது.

இதையடுத்து மீண்டும் அவனிடம் அதிகாரிகள் விசாரணை தொடங்கி நடத்தி வருகின்றனர். சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 24ம் தேதி இரவு கல்லூரி மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வழக்கில் கடந்த 25ம் தேதி கோட்டூர்புரத்தை சேர்ந்த பிரியாணிக்கடைக்காரரான ஞானசேகரன் என்பவனை கோட்டூர்புரம் உதவி கமிஷனர் பாரதிராஜா தலைமையில் தனிப்படையினர் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி 3 பெண்கள் ஐபிஎஸ் அதிகாரிகள் கொண்டு சிறப்பு புலனாய்வு குழு தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

அதன்படி கடந்த 20ம் தேதி மாலை முதல் 7 நாள் காவலில் பாலியல் சைகோ ஞானசேகரனை சிறப்பு புலனாய்வு குழுவினர் நீதிமன்ற அனுமதியுடன் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணையில் ஞானசேகரனிடம் அவனது செல்போன் மற்றும் லேப்டாப்பில் உள்ள ஆபாச வீடியோக்களில் உள்ள பெண்கள் யார் யார்? என்பது குறித்து வீடியோவை நேரடியாக ஞானசேகரிடம் காண்பித்து விசாரணை நடத்தினர்.

அப்போது நேற்று முன் தினம் அதிகாலை 3 மணி அளவில் திடீரென ஞானசேகரன் 'கண்களை மேல் நோக்கி பார்த்த நிலையில் கை மற்றும் கால்களை அசைத்தப்படி வலிப்பு ஏற்பட்டது'. இதனால் சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். உடனே ஞானசேகரனை மீட்டு ஆம்புலன்ஸ் உதவியுடன் கைதிகளுக்கான சிறப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ள ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு வலிப்பு நோய் தொடர்பாக டாக்டர்கள் ஞானசேகரனுக்கு தலையில் எம்ஆர்ஐ ஸ்கேன் எடுத்து பார்த்தனர். அப்போது, ஞானசேகரன் வலிப்பு ஏற்பட்டதற்கான எந்த அறிகுறிகளும் ஏற்படவில்லை என்று எம்ஆர்ஐ ஸ்கேன் ரிப்போட்டு மூலம் தெரியவந்தது. இதனால் குழப்பமடைந்த டாக்டர்கள் உடனே ஞானசேகரனின் ஸ்கேன் ரிப்போர்ட்டை மூத்த டாக்டர்களிடம் காண்பித்து ஆலோசனை நடத்தினர். அப்போதுதான் ஞானசேகரன் உடல் நிலை சீராக உள்ளது என்றும், விசாரணையை திசைதிருப்பும் வகையில், அவர் வேண்டும் என்றே வலிப்பு வந்தது போல் நடித்தது தெரியவந்தது. அதனை தொடர்ந்து சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் டாக்டர்கள் அறித்த பரிந்துரைப்படி மீண்டும் ஞானசேகரனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே ஞானசேகரன் செல்போனில் உள்ள தொடர்புகளை ஆய்வு செய்தபோது, அதில் அடையார் காவல் நிலையத்தில் பணியாற்றும் 6 காவலர்கள் ஞானசேகரனுடன் அடிக்கடி தொடர்பில் இருந்தது தெரியவந்தது. அவர்களுக்கு ஞானசேகரன் சில வீடியோக்களை பகிர்ந்ததும் தொலைதொடர்பு தகவல்களின் படி உறுதியாகியுள்ளது. இதையடுத்து ஞானசேகரனிடம் தொடர்பில் இருந்த 6 காவலர்களின் செல்போன்களை ஆய்வு செய்யும் வகையில், சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் பறிமுதல் செய்து ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

மாணவியின் எப்ஐஆர் வெளியான விவகாரம் அபிராமபுரம் எழுத்தர் மருதுபாண்டி சேர்ப்பு

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் முதல் தகவல் அறிக்கை வெளியாகி சர்ச்சை ஏற்படுத்தியது. இதைத்தொடர்ந்து, சென்னை பெருநகர காவல்துறையின் சைபர் க்ரைம் போலீசார் மாணவியின் முதல் தகவல் அறிக்கையை எடுத்து சமூக வலைத்தளங்களில் பரப்பியதாக இதுவரை 14 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணையும் தற்போது நீதிமன்றம் அமைத்த 3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு விசாரித்து வருகின்றது.

இந்நிலையில் மாணவியின் முதல் தகவல் அறிக்கை வெளியான விவகாரத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தற்போது அபிராமபுரம் காவல் நிலையத்தில் எழுத்தராக பணியாற்றி வரும் தலைமை காவலர் மருதுபாண்டி என்பவரை சேர்த்துள்ளனர். இதனால் அவரிடமும் தனியாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

கட்சி பதவிக்கு பணம் வசூல்?

விஜய்யின் தவெக எச்சரிக்கை

சென்னை, ஜன.24: தமிழக வெற்றிக் கழகம் கட்சியை நடிகர் விஜய் தொடங்கி இருக்கும் நிலையில் முதல் மாநாட்டை நடத்தி இருந்தார். அதேநேரம் மாவட்ட பொறுப்பாளர்களை அமைப்பதற்கான பணியிலும் தமிழக வெற்றிக்கழகம் தீவிரமாக இறங்கியுள்ளது.

சமூக வலைத்தளங்களில் தவெகவில் மாவட்ட அளவிலான பொறுப்புகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு பணம் வசூலிப்பதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகி இருந்தது.

குறிப்பாக, விழுப்புரம் நகர தலைவர் பதவிக்கு 15 லட்சம் ரூபாய் கொடுத்தால் பதவி கிடைக்கும் என்பதை போன்ற வாட்ஸ் அப் குரூப் உரையாடல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இது தவெகவில் சலசலப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் பனையூரில் கட்சி நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், 'யாராக இருந்தாலும் சரி தெளிவாக சொல்கிறேன், பதவிக்கு யாராவது பணம் வாங்கினார்கள் என்று சொன்னால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என எச்சரித்தார்.

பொங்கல் சிறப்பு பேருந்துகள் மூலம்

12.81 கோடி பேர் சொந்த ஊர்களுக்கு பயணம்

அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, ஜன.24: பொங்கல் திருநாளை முன்னிட்டு, தினசரி இயக்கக்கூடிய பேருந்துகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 1,87,617 பேருந்துகள், சென்னை உட்பட தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் கடந்த 10ம் தேதி முதல் 19ம் தேதி வரை இயக்கப்பட்டது. மேலும், இந்தாண்டு 37,832 பேருந்து சேவைகள் கடந்த ஆண்டை விட கூடுதலாக பயணிகளின் வசதிக்காக இயக்கப்பட்டது.

பொங்கல் பேருந்து இயக்கத்தின் வழியாக அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் சுமார் ₹237.47 கோடி அளவில் இயக்க வருவாயை ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ₹44.69 கோடி அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண்.11781/2024/அ3 நாள்: 20.01.2025
முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2025-26
MGSMT – 2025-26 (Phase-1)

1. தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு (MGSMT–2025–26 Phase–1) திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊரக சாலைகளை வலுப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறையில்) வரவேற்கப்படுகிறது.
2. முன் வைப்புத் தொகை ஒப்பந்த மதிப்பில் 1 சதவீதம்.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையத்தள முகவரியில் 24.01.2025 முதல் 07.02.2025 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்:

1	மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	07.02.2025 மாலை 3.00 மணி வரை
2	மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	07.02.2025 மாலை 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ.268/ஒப்பந்தப்புள்ளி/2025
திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர்

ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பு விபரம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

1	ஒப்பந்தபுள்ளி கோரும் அலுவலர் பெயர் மற்றும் முகவரி	:	திரு.ம.தங்கவேல் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம், விளாத்திகுளம்.
2	திட்டத்தின் பெயர்	:	சீமை கருவேல் மரங்கள் அகற்றுதல்.
3	வேலையின் பெயர்	:	அயன்செங்கல்படை ஊராட்சி கே.குமராபுரம் கிராமத்தில் சர்வே எண்: 147–3B சீமை கருவேல் மரங்கள் அகற்றுதல். (அரசுக்கு சொந்தமான நிலத்தில்)
4	அ) நடைபெறும் மாவட்டத்தின் பெயர் ஆ) ஒப்பந்தகாரர்	: :	தூத்துக்குடி அனைத்து ஒப்பந்தகாரர்கள்
5	ஏலம் நடைபெறும் இடம் & நாள் & நேரம்	:	சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகம் நாள்: 13.02.2025 மு.ப. 11.00 மணி
6.	செலுத்தப்பட வேண்டிய முன்வைப்பு தொகை விபரம்	:	ரூ.59480/–

வெ.ஆ.எண்: 09/செ.ம.தொ.அ./தூடி/2025
நாள்: 23.01.2025
தனி அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
விளாத்திகுளம்
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

muthoot HOUSING FINANCE
முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: TC எண் 14/2074–7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம்–695 034, கார்பரேட் அலுவலகம்: 12/A 01, 13,ஆவது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்–G பிளாக் (கிழக்கு), மும்பை–400051, மின்னஞ்சல் முகவரி: authorized.officer@muthoot.com

கோரிக்கை அறிவிப்பு
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ்

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் ("எம்எச்எப்சிஎல்") அதிகாரப்பூர்வ அதிகாரி ஆவார் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, பின்வரும் கடன்தாரர்(கள்), உப–கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் உங்களுக்கு வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் மேலும் மாற்று பட்டுவாடாவாக மற்றும் வழியில் கீழேக் கொடுக்கப்பட்டவாறு அறிவிப்பு பிரகாத்தின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நாளது தேதிய வட்டி, செலவு மற்றும் கட்டணங்கள் உட்பட முழு நிலுவைத்தொகையைச் செலுத்தி நிறுவனத்திற்குரிய தங்கள் முழு கடன் பொறுப்பைத் தீர்க்குமாறு கோருகிறார். கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கடனீடாக, பின்வரும் கடனீட்டுச் சொத்து(கள்) முறையே மேற்கூறிய கடன்தாரர்(கள்), உப–கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மூலம் எம்எச்எப்சிஎல் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்/கள் பெயர் & கடன் கணக்கு எண்	செயல்படா சொத்து நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	மொத்த நிலுவைத்தொகை
1.	கடன் கணக்கு எண். 11145104354 1.முத்து நாராயணன் வேல்சாமி, 2.சேர்மகனி. V வேல்சாமி, 3.விஜய. R ராமநாதர் (எ) விஜயா. R ராமநாதர், 4. வேல்சாமி பழனிசாமி நாடார் (எ) வேல்சாமி பழனிசாமி, 5. அண்ணாவடிவு V வேல்சாமி (எ) அண்ணாவடிவு V வேல்சாமி (எ) அண்ணாவடிவு எசக்கி நாடார்.	29 டிசம்பர் 2024	21 ஜனவரி 2025	10– ஜனவரி–2025 தேதியன்று – ரூ.4,73,774.03/– (ரூபாய் நான்கு லட்சத்து எழுபத்து மூவாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா மூன்று மட்டும்)
	கடனீட்டுச் சொத்து(கள்)/ அசையா சொத்து(கள்) விவரம்: நிலம், கட்டிடம் அனைத்து துண்டு மற்றும் பகுதியும் அடங்கிய சொத்து உள்ள அயன் புஞ்சை, S.எண்.268/3A, புதிய S.எண்.325/51 – 1.45 ஏக்கர், வார்டு எண்.3, மேற்கு பக்கம் 4வது தட்டு 36 சென்ட், கிழக்கு பக்கம் 1.45 சென்ட்ஸ் அமைந்துள்ளது, கதவு எண்.3/136, நாராயணசாமி கோவில் தெரு, சிவகாமிபுரம், அஞ்சுன்கட்டளை பஞ்சாயத்து & கிராமம், ஆலங்குளம் தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம், கடையம் துணை மாவட்டத்திற்கு உட்பட்டது மற்றும் சேரன்மஹாதேவி பதிவு மாவட்டத்தின், 60.705 சதுர மீட்டர் பரப்பளவில் அளவிடப்படுகிறது. எல்லைக்குள்:– கிழக்கே: தெரு தெற்கு X வடக்கு மேற்கு: தெரு தெற்கு X வடக்கு வடக்கு: தெரு கிழக்கு X வடக்கு வடக்கு: தெரு கிழக்கு மேற்கு தெற்கு: அடோப் திரு. முருகனுக்குச் சொந்தமானது.			

மேற்கூறிய கடன்தாரர், உப–கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) மேற்கூறியவாறு எம்எச்எப்சிஎல் பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், எம்எச்எப்சிஎல் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை சுவாதீனம் செய்யும் உரிமை பெறும். மேலும் முற்றிலும் கடன்தாரர்களின் முழு பொறுப்புகள், செலவு மற்றும் விளைவுகளில், சட்டத்தில் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறுமானு இவ்வித பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேற்கூறிய கடன்தாரர்(கள்), உப–கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் முன்கூட்டிய ஒப்புதலின்றி அறிவிப்பில் குறிப்பிட்ட மேற்கூறிய கடனீட்டுச் சொத்தினை(களை) விற்பனை, குத்தகை அல்லது பிற வழியில் பெயர்மாற்றம் செய்வதற்கு சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 இன் உட் பிரிவு (13) விதிமுறையின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இடம்: தமிழ்நாடு, நாள்: 24 ஜனவரி, 2025 ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடுக்காக

"அண்டப் புளுகனோடு இனியும் இருக்கப் போவதில்லை"

சென்னையில் திடீரென ஒட்டப்பட்ட போஸ்டர்களால் பரபரப்பு

சென்னை, ஜன.24: "அண்டப் புளுகனோடு இனியும் இருக்கப் போவதில்லை.. மானங்கெட்ட உன்னோடு இனியும் இருக்கப்போவதில்லை என்ற வாசகத்துடன் சென்னை முழுக்க பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அரசியல் கட்சியினர் விதவிதமான வாசகங்கள் அடங்கிய போஸ்டர்களை ஒட்டுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். அந்த வகையில் சென்னை நகர் முழுவதும் பல்வேறு பகுதிகளிலும் நேற்று காலையில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, சென்னையில் போக்குவரத்தின் இதய பகுதியான அண்ணா சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வளைத்து வளைத்து ஒன்றல்ல, இரண்டல்ல, நான்கு போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தது.

அந்த போஸ்டரில் "அண்டப்புளுகனோடு இனியும் இருக்கப்போவதில்லை, மானங்கெட்ட உன்னோடு இனியும் இருக்கப்போவதில்லை" என்ற வாசகம் அதில் இடம்பெற்றுள்ளது. வெள்ளை போஸ்டரில்

கருப்பு நிறத்தில் இந்த வாசகம் உள்ளது. வேறு எந்தக் குறிப்பும் அந்த போஸ்டரில் இடம் பெறவில்லை.

அதாவது இதனை யார் வடிவமைத்தது, எந்தக் கட்சிப் பொறுப்பாளர் என எந்த விவரங்களும் இல்லை. இந்த போஸ்டரை பலரும் பார்த்து, இந்த போஸ்டரில் குறிப்பிடப்படுவது யாராக இருக்கும் என கேள்வி எழுப்பி வருகின்றனர். இந்த போஸ்டர் தான் சென்னையில் இன்றைக்கு ஹாட் டாப்பிக்காக மாறியுள்ளது. இந்த போஸ்டரால் இனி என்ன நடக்க போகிறது என்ற பரபரப்பும் தொற்றியுள்ளது.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் அரசு தரப்பில் ஆஜராக

சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் நியமனம்

சென்னை, ஜன.24: பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை 5ம் தேதி பெரம்பூரில் அவரது வீட்டின் அருகே படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் நாகேந்திரன், அவரின் மகன் அஸ்வத்தாமன் உள்ளிட்ட 27பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் சம்பவ செந்தில் தொடர்ந்து தலைமறைவாக இருந்து தேடப்பட்டு வருகிறார். இந்த வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் முன்பு விசாரணையில் உள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் காவல்துறை தரப்பில் ஆஜராவதற்காக சிறப்பு குற்றவியல் வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் ஆர்.ஸ்ரீனிவாஸ், கூடுதல் சிறப்பு குற்றவியல் வழக்கறிஞராக சி.எஸ்.எஸ்.பிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அரசாணையை உள்துறை (நீதிமன்றங்கள்) கூடுதல் தலைமை செயலாளர் தீரஜ் குமார் பிறப்பித்துள்ளார்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவெட் லிமிட்டெட்
CIN No U67100TZ2014PTC020363
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் - மொபைல் எண். +91 9344684194 / 98840 62068 / 99623 33307

[பிற்சேர்க்கை – IV–A]
[விதி 8 (6) உ/ப 9(1) விதியைப் பார்க்கவும்]
அசையாச் சொத்தின் மின்–ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துகளை ஒரக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை மறுசீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து அமலாக்கச் சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002–ன் விதி 8 (6) உ/ப 9(1)–ன் விதிமுறையுடன் படிக்கவும். இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL)–ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓம்காரா PS 06/2021–22 டிரஸ்ட்– ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) ஆனது, 25.06.2021 தேதியிட்ட பணி ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் கீழ் இண்டல் இந்த் வங்கி லிமிடெட் பணி ஒப்படைப்பவர் வசமிருந்து இதன் கீழ்க்கண்ட கடனீட்டுச் சொத்துகளுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், கடனீட்டுச் சொத்துகளை உடைமை கொள்ளும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார். இதன் கீழே அந்தந்த இடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கடனீட்டு பெற்று கடன் வழங்கிய OARPL–க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் உப– கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள சுவாதீனத்திலுள்ள சொத்துகள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் பயன்படுத்தி "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "எந்த உத்தரவாதமும் இல்லாதது" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், நிலுவைத்தொகைகளை, பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, சுவாதீன தேதி விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்/உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ சர்பாசி சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி/சுவாதீன தேதி	சொத்தின் உரிமையாளர்	கடனீட்டு சொத்தின் விவரங்கள்:	சொத்தின் தன்மை	23.01.2025 தேதிப்படி நிலுவைத் தொகை	நிர்ணய விலை/ஏல அதிகரிப்பு	EMD–நிர்ணய விலையில் 10%	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்
லாட் 1	M/s. J மற்றும் J டிரேடர்ஸ், திரு. B.முத்துக்குமார், திரு. B.பெனிட்கரன், திரு.ரவீந்திரன் துரைநாயகம் மற்றும் திருமதி. டோரா கிராஸ்பெல் 13(2) அறிவிப்பு தேதி: 06.03.2023 அடையாள சுவாதீன தேதி: 14.07.2023	திரு.B.முத்துகுமார் (எ) முத்துக்குமார் தினகரன் தபெ திரு.சௌந்தராஜ் நாடார் பாலாசிங்	ஆவண எண். 4384/2004 தேதி: 10.12.2004 சா.ப.அ. பாளையங்கோட்டை பாளையங்கோட்டை பதிவு மாவட்டம் மற்றும் சார் பதிவு மாவட்டம் பாளையங்கோட்டை தாலுகா விஜயராகவ முதலியார்சத்திரம் கிராமம் வறண்ட நிலம் சர்வே எண்.142/5 (பழைய அடங்கல் எண்.509/A) ஏர்ஸ் 0.40.0. ஏக்கர் 1.15 சென்ட், இதில் பொது பாதைக்கு 5 சென்ட் விட்டு, மீதமுள்ள ஏக்கர் 1.10 சென்ட் "ராணி மங்கம்மாள் நகர்" என்று பெயரிடப்பட்ட வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, மேலும் அந்த மனை எண். 10 –ல் 4320 சதுர அடி பரப்பளவு அளவீடுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு பக்கங்கள் 48 அடி, தெற்கு வடக்காக கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்கள் 90 அடி. எல்லைகள் : வடக்கு: கிழக்கு–மேற்கு சாலை, கிழக்கு : மனை எண்.9 மனை, தெற்கு : மனை எண்.15 மனை, மேற்கு: திரு. B. முத்துக்குமார் என்கிற B.முத்துக்குமார் தினகரனின் பிளாட் எண். 11–வது மனை.	குடியிருப்பு காலி மனை	ரூ.16,09,57,439 (ரூபாய் பதினாறு கோடியே ஒன்பது லட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து நானூற்று முப்பத்தொன்பது மட்டும்)	ரூ.48,00,000 (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சம் மட்டும்) ஏல அதிகரிப்பு ரூ.25000/ (ரூபாய் இருபத்தைந்து ஆயிரம் மட்டும்)	ரூ.4,80,000/ (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	மேலே கொடுக்கப்பட்ட மொபைல் எண்களில் அதிகாரப்பூர்வ அலுவலரின் முன் அனுமதியுடன்
லாட் 2	M/s. J மற்றும் J டிரேடர்ஸ், திரு. B.முத்துக்குமார், திரு. B.பெனிட்கரன், திரு.ரவீந்திரன் துரைநாயகம் மற்றும் திருமதி. டோரா கிராஸ்பெல் 13(2) அறிவிப்பு தேதி: 06.03.2023 அடையாள சுவாதீன தேதி: 14.07.2023	திரு.B.முத்துகுமார் (எ) முத்துக்குமார் தினகரன் தபெ திரு.சௌந்தராஜ் நாடார் பாலாசிங்	ஆவண எண்.3299/2004 தேதி.15.09.2004–பாளையம்கோட்டை சா.ப.அ. (அ) பாளையம்கோட்டை பதிவு மாவட்டம் மற்றும் சார் பதிவு மாவட்டம், பாளையம்கோட்டை தாலுகா, விஜயராகவமுதலியார் சத்திரம் கிராமம், வறண்ட நில சர்வே எண்.142/5 (பழைய அடங்கல் எண்.509/A) ஏர்ஸ் 0.40.0. ஏக்கர் 1.15 சென்ட்கள், இதில் 5 சென்ட்கள் பொதுப்பாதைக்கு விடப்பட்டது. மீதம் ஏக்கர் 1.10 சென்ட்கள் "ராணிமங்கம்மாள் நகர்" என்ற பெயரில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டது மற்றும் இதில் மனை எண்.11 4320 ச.அடி பரப்பளவு, அளவீடுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கில் 48 அடி, தெற்கு வடக்காக கிழக்கு மற்றும் மேற்கில் 90 அடி, எல்லைகள்:– வடக்கு: 20 அடி அகல பொது சாலை, கிழக்கு: மனை எண்.10ல் உள்ள மனை, தெற்கு: மனை எண்.14ல் உள்ள மனை, மேற்கு: மனை எண் 12 மற்றும் (அ) பாளையம்கோட்டை பதிவு மாவட்டம் மற்றும் சார் பதிவு மாவட்டம், பாளையம்கோட்டை தாலுகா, விஜயராகவமுதலியார் சத்திரம் கிராமம், வறண்ட நில சர்வே எண்.142/5 (பழைய அடங்கல் எண்.509/A) ஏர்ஸ் 0